
உ
சிவமயம்



# விநாசித்தம்பி இராமநாதன்
அவர்களின்

# சேவைநலன் பாராட்டுவிழா மலர்

பாராட்டி வெளியிடுவோர்

சைவ பரிபாலன சபை
450, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

2004.02.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சிதம்பரம் புண்ணியநாச்சி மடதர்ம மடாலயம்

அமைப்பதற்கான யாழ்ப்பாணம் சைவபரிபாலன

சபையின் சிறப்புப் பிரதிநிதியும்,

சபை ஆயுள் உறுப்பினருமாகிய

# ஸ்ரீமான் விநாசித்தம்பி இராமநாதன்

அவர்களின்

சேவைநலன் பாராட்டி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்

புண்ணியநாச்சி அம்மையார் தினத்தன்று (19.02.2004)

நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்

நடாத்திய பெருவிழாவில் வெளியிடப்பெற்ற





# சேவைநலன்

# பாராட்டுவிழா மலர்

சுபானு வருடம் மாசிமாதம் 7ஆம் நாள்

வியாழக்கிழமை மு.ப.10.30 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302.124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்ற அப்பர் பெருமானின் அருள்வாக்கை நினைவுபடுத்தி அவ்வழியிலே நின்று சிவப்பணிகளைச் செய்து வருபவர் திரு.வி.இராமநாதன் என்றால் அது மிகையாகாது.

அவர் ஆற்றிய சிவதொண்டினைப் பாராட்டிக் கௌரவிக்க எடுக்கப்பட்ட பாராட்டு விழா மிகப்பொருத்தமானதேயாகும்.

சிதம்பரம் 28ஆம் இலக்கம் மாலைகட்டித் தெருவில் உள்ள புண்ணியநாச்சியம் மையார் மடத்தை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் பராமரித்து வருகின்றனர்.

சிதம்பர தரிசனத்திற்காகச் செல்லும் அடியார்கள் இம்மடத்தில் தங்கியிருந்து தமது வழிபாட்டை நிறைவேற்றுவர். பல வருடங்கள் சென்றமையால் மடக்கட்டிடம் சீலமடைந்திருந்தது. இதனைப் புனரமைப்புச்செய்து, சகலவசதிகளுடனும் பயன்படக் கூடிய வகையில் அமைக்கவேண்டும் எனச் சைவபரிபாலன சபையார் தீர்மானித் திருந்தனர்.

**ஆதுலர்க்குச்சாலை அமைப்பது முதல் கன்னிகாதானம் வரை சொல்லப்பட்ட 32 தருமங்களுள் மடம் அமைத்தலும் ஒன்றாகச் சொல்லப்பட்டது.**

சிதம்பர தரிசனத்திற்காக வருடந்தோறும் இந்தியா சென்றுவரும் திரு. வி. இராம நாதன் அவர்களது உள்ளத்தில் இம்மடத்தைப் புனரமைப்புச்செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

இதனையறிந்த சைவபரிபாலன சபையினர் இம்மடத்தின் புனரமைப்பு வேலை களைச் செய்வதற்காக சபையின் பிரதிநிதியாக திரு. வி. இராமநாதன் அவர்களை நியமித்தனர்.

இதற்கு உறுதுணையாக சபையின் மூத்த உறுப்பினர் திரு த. சண்முகலிங்கம் அவர்களும் இணைந்து கொண்டார்.

அவர்கள் எடுத்துக்கொண்ட சிவப்பணிக்குத் திருவருளும் துணைநின்றது. இரு வரது விடாமுயற்சிகளினால் மடம் புனரமைக்கப்பட்டு, 16.06.2002ல் திறந்து வைக்கப் பட்டது.

இன்று பலவசதிகளையும் கொண்டதாக இம்மடம் அமைந்து, சிதம்பர தரிசனத்திற்காக வரும் பல அடியார்களின் பாராட்டினையும் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வருத்தம் பாராது இம்மடத்திருப்பணியை நிறைவேற்றுவதற்தாக வெளி நாடுகளுக்கு திரு. வி. இராமநாதன் அவர்கள் சென்று பொருள்களைச் சேகரித்தார்.

அவரது அயராத உழைப்பினால் சிதம்பரத்தில் யாழ்ப்பாணத்தார் மடம் என்று சொல்லக்கூடிய வகையில் புண்ணியநாச்சியம்மையார் மடம் ஒளிவீசி நிற்கின்றது.

சைவ உலகுக்கு அவர் ஆற்றிய தொண்டினை என்றுமே மறக்க முடியாது.

அத்தகைய பெரியார் என்றும் சுகமுடையவராக வாழ்ந்து, மேலும் இம்மடத்தின் சிறந்த பணிகளுக்கு உதவும் வண்ணம் எல்லாம்வல்ல சிதம்பர நடராஜப் பெருமானின் திருவடிகளை வணங்கித் துதிப்போமாக.

சுபம்.

**தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார் . மற்றல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு -**

**வள்ளுவர்.**

**450, காங்கேசந்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்**

சைவப்புலவர் வ. கந்தசாமி
தலைவர்.
சைவபரிபாலன சபை.

# அருள் விருந்து

* **தூய உள்ளத்தில் வெறுப்புத்தன்மை வேர்விடுவதில்லை.**
* **துன்பங்கள் வருவதால் மனிதன் சீர்திருத்தமடைகின்றான்.**
* **எண்ணத்துக்குத் தக்கதாக வாழ்வு அமைகிறது.**
* **பொறாமை மனிதமேன்மைகளைத் தேய்த்து விடுகின்றது.**
* **நெறியான வாழ்வில் நேர்மையனைத்தும் உண்டு.**
* **பற்றற்றவனை வினைத்தளைகள் ஒன்றும் செய்வதில்லை.**

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மடத்தின் மறு உருவத்திற்கு

வித்திட்ட பெரியார்

**அமரர் N.K.மயில்வாகனம்**



முன்னவர் இட்ட வித்து முளைத்துப்

பெரு விருட்சமாக நிற்பதை

நிலைநாட்டிய

**திரு. வி.இராமநாதன் அவர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மடம்
# அமைத்த கதை

சிதம்பரம் புண்ணியநாச்சி மடம், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் 1938 ஆம் ஆண்டுமுதல் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இம்மடம் நவீன காலத்திற்கு ஏற்ற வசதிகளுடன் திறம்பட புதிதாகக்கட்டி முடிக்கப்பெற்று 16-06-2002 ஆம் நாள் சிதம்பர யாத்திரிகள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மிகப் பழைமையான நாற்சாரக் கட்டிடக்கலை அமைப்பையுடையது. மடத்தின் முந்திய கட்டிடம் நாட்டு ஓடுகளினாலும், ஓலைகளினாலும் வேயப்பட்டது.

இன்று கட்டி முடிக்கப்பெற்ற கட்டிடம் 6000சதுர அடியைக் கொண்டது. இரண்டு மாடிகள் உடையது.

நிலத்தளத்தில் (Ground Floor) அமைந்துள்ள ஆறு அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடியவை. இவ் ஆறு அறைகளுடன், உணவு மண்டபம், அலுவலக அறை, வரவேற்பு மண்டபம், களஞ்சிய அறை, சமையல் அறை, மடப்பொறுப்பாளர் பாவனைக்கு இரு அறைகள் என்பனவும் இத்தளத்தில் அமைந்துள்ளன.

மேல் மாடியில் (1st Floor) சுமார் 1000 சதுர அடி கொண்ட மண்டபமும், குளியலறையுடன் கூடிய ஆறு அறைகளும், உணவு மண்டபமும் அமைந்துள்ளன.

முழுக் கட்டிடத்திற்கும் சலவைக்கல் பதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அறையிலும் இரண்டு கட்டில்கள், அலங்காரம் செய்யும் வசதியுடன் கூடிய கண்ணாடி மேசை, கதிரைகள் உண்டு. மின் இணைப்பு வசதிகளில் பல புதிய முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

மேலும் ஒரு மேல் மாடி (2nd Floor) கட்டுவதற்கான கட்டிட இணைப்புகளும் பொருத்தப்பட்டுள்ளன.

நடுத்தர நட்சத்திர விடுதிகளின் அறைகளில் உள்ள அனைத்து வசதிகளும் புண்ணியநாச்சி மடத்தின் அறைகளிலும் உண்டு.

இக்கட்டிடத்திற்கு இந்திய ரூபா 27,64,159 .23 செலவாகியுள்ளது. ரூபா மதிப்பின் பிரகாரம் இதன் இலங்கைப் பெறுமதி ரூபா 60 இலட்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மடத்தை நிறுவுவதற்கு பல்லாற்றாலும் உதவியவர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கொழும்பு பிரபல வர்த்தகரும், சமய சமூக சேவையாளருமான திரு.வி.இராமநாதன்.

திரு. வி. இராமநாதன் அவர்களும் அவரது பிள்ளைகளும் பெருந்தொகைப் பணத்தை நன்கொடையாகத் தந்து உதவினர். கனடா, சுவிஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் கொழும்பிலும் தனது நண்பர்கள், உறவினர்களிடமும் நிதி பெற்று மடம் அமைக்க உதவினார்.

நீண்டகால குடும்ப நண்பரான திரு.வி.இராமநாதன் மிகுந்த கடவுள் பக்தியும் தர்ம சிந்தையும், ஆசாரசீலமும் உடையவர். தனது மூதாதையரால் ஸ்தாபிக்கப்பெற்று, வழிபட்டுவந்த மடாலயமாக இருந்த புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீபால சுப்பிரமணியசுவாமி கோயிலை ஆகம முறைப்படி புதிதாகக்கட்டி 1981 இல் கும்பாபிஷேகம் செய்வித்தார்.

இக்கோவிலுக்கு சித்திரத்தேர், தேர்முட்டி ஆகியவை அமைத்ததுடன் அர்ச்சகர் வசிப்பதற்கு, கோயில் அருகாமையில் அமைந்த தனது காணியில் ஒரு வீடும் கட்டிக் கொடுத்து, கோவிலில் முறைப்படி நித்திய,நைமித்திய பூசைகளைச் சிறப்பாகச் செய்வித்து வருகின்றார்.

புங்குடுதீவு மடத்துவெளி கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்திற்கு விளையாட்டு மைதானம் அமைக்கத் தனது காணி ஒன்றை உபகளித்துள்ளார்.

தென்னிந்திய வடஇந்திய யாத்திரை செய்துள்ளார்.

இமாலயத்தில் உள்ள ரிஷிகேசம், பத்திரி கேதாரம் முதலிய தலங்களுக்கு யாத்திரை செய்துள்ளார்.

மார்கழித் திருவாதிரை உற்சவதினத்திற்காக சிதம்பரத்துக்குத் தொடர்ச்சியாக இருபத்துநான்கு வருடங்கள் (2004 ம் வருடத்துடன்) சென்றுள்ளார்.

1988ம் ஆண்டு நான் சைவ பரிபாலனசபையின் செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில் திரு. வி.இராமநாதன் மார்கழித் திருவாதிரைக்குச் சிதம்பரம் செல்வதாக என்னிடம் கூறினார்.

சிதம்பரம் செல்லும்போது எமது புண்ணியநாச்சி மடத்தையும் பார்த்து வரும்படி கூறினேன். அவ்வருடம் அவருடன் அவரது கிராமத்தவரும், நண்பருமான N.K. மயில்வாகனமும் உடன் சென்றிருந்தார்.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட N.K.மயில்வாகனம் அவர்கள் கொழும்பில் பிரபல வர்த்தகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த கடவுள் பக்தி உடையவர். கோயிற்ணி செய்பவர்.

புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயம், வீரகத்தி விநாயகர் ஆலயம், ஆகியவற்றின் திருப்பணிகளைச் செய்வித்து கும்பாபிஷேகம் செய்தவர்.

கொழும்பு கதிரேசன் வீதி, (செக்கடித்தெரு) கதிர்வேலாயுதசுவாமி கோவில் அறங்காவலர் சபையின் பொருளாளராக 30 ஆண்டுகள் பணியாற்றி, திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்வித்தார்.

இந்துசமய இராஜாங்க அமைச்சரால் " இறைபணிச் செல்வர்" என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

சிதம்பரம் சென்ற திரு.வி. இராமநாதனும் N .K. மயில்வாகனமும் எமது மடத்தைப் பார்வையிட்டனர்.

மிகப்பழமையான கட்டிடங்களுடன் பழுதடைந்த நிலையில் இருந்த எமது மடத்தைப் பார்வையிட்ட இறைபணிச்செல்வர் N .K. மயில்வாகனமும் அவர்கட்கு இம் மடத்தைப் புதிதாகக்கட்ட வேண்டுமென விருப்பம் ஏற்பட்டிருந்ததை நான் அறிந்திருந்தேன். இதனை நிர்வாக சபைக்குத் தெரியப்படுத்தினேன்.

நிர்வாகசபை, N .K. மயில்வாகனம் அவர்களை சிதம்பரம் மட பரிபாலனத்துக்கு சபையின் பிரதிநிதியாக 25.11.1989 ம் திகதி நியமித்தது.

மடத்தைப் புதிதாகக் கட்ட அநுமதியும் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிதம்பரம் சென்ற N .K. மயில்வாகனம் தனது பணத்தில் இம்மடத் திற்கு இரு மலசலகூடம், இரு குளியலறை, காணியின் தெற்கு, மேற்கு எல்லைச்சுவர், குழாய்க் கிணறு ஆகியவற்றைக் கட்டினார்.

மடத்தைப் புதிதாகக் கட்டுவதற்கான வரைபடமும் தயாரிக்கப்பட்டது.

திரு. மயில்வாகனம் அவர்கள் 1993 இல் நோய்வாய்ப்பட்டு 1995 இல் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அவர் விரும்பிய பணியைச் செய்து முடிக்கவில்லை.

தனது நண்பர் அமரர் மயில்வாகனம் அவர்களின் நோக்கத்தைத் தான் பூர்த்தி செய்யவேண்டுமென்ற பெருவிருப்பு திரு. இராமநாதன் உள்ளத்தில் குடிகொண்டது. இதனை நிர்வாக சபைக்குத் தெரியப்படுத்தினேன். சிதம்பரம் மடபரிபாலனத்துக்கு திரு.வி.இராமநாதன் அவர்களை 01.01.1998ம் திகதி நிர்வாகசபை நியமித்ததுடன் மடங்கட்டும் அநுமதியும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன வசதிகள் கொண்ட இரு மாடிக்கட்டிடத்திற்கான புதிய வரைபடம் தயாரிக்கப்பட்டு, 15-12-1999 திகதியன்று புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

திரு. வி. இராமநாதன் நிதி வசூல் செய்து தந்தார். நான் சிதம்பரத்தில் தங்கி நின்று கட்டிடப்பொருள்களை வேண்டிக்கொடுத்தேன். ஒப்பந்த அடிப்படையில் கட்டிட வேலைகள் ஐந்து கட்டமாகக் கட்டி நிறைவு செய்யப்பெற்றது. இவ்வேலைகள் சம்பந்தமாக நான் ஏழு தடவைகள் சிதம்பரம் சென்று தங்கி வந்தேன். திரு. வி. இராமநாதன் அவர்களும் ஆனி, மார்கழி உற்சவ காலத்தில் சிதம்பரம் சென்று வந்தார்.

திரு.வி.இராமநாதனது உதவியாலும் உற்சாகத்தாலும் மடம் சிறப்பாகக் கட்டி முடித்து, 16.06.2002 திகதியன்று பல பெரியார்கள், அன்பர்கள் முன்னிலையில் சிதம்பரம் நாவலர் அறக்கட்டளைத் தலைவர் திரு. M.சுப்பராயப்பிள்ளை அவர்களால் கோலாகலமாக புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பெற்றது.

ஈழச்சைவ அன்பர்கள் இம் மடத்தில் வந்து தங்கிச் செல்கின்றனர். பிறநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் சைவ அன்பர்கள் மடத்தில் தங்கிச் செல்கின்றனர்.

ஆனி, மார்கழி உற்சவ காலங்களில் மடத்தில் அன்னம்பாலிப்பு நடைபெறு கின்றது.

பல ஆண்டு காலமாக குடும்பத்துடன் மடத்தில் குடியிருந்து பொறுப்பாளராகக் கடமையாற்றிய அமரர் திருஞானசம்பந்ததேசிகரின் மூத்தமகன் தி. கணேசன்தேசிகர் மடப்பொறுப்பாளராக எமது பிரதிநிதியால் நியமிக்கப்பட்டு, அவர் மூலம் மடம் சிறந்த முறையில் நிருவகிக்கப்பட்டு வருகின்றது.

இவர் தனது குடும்பத்துடன் மடத்தில் ஒரு சிறு பகுதியில் தங்கியிருந்து மடப்பணிகளைச் செய்கிறார்.

அங்கு வருபவர்களை நன்கு உபசரித்து தங்கும் வசதிகள் செய்து கொடுப்ப துடன் கோவில் தரிசனத்திற்கும் தேவைப்பட்ட உதவிகளை மடத்தின் கட்டளைத் தீட்சிதர் மூலம் செய்து கொடுக்கின்றார்.

சிதம்பரத்தில் யாழ்ப்பாணத்தவர்களின் மடம் சுமார் 20 வரை இருந்ததாக அறிய முடிகின்றது.

இன்று எமது மடம் மாத்திரமே இயங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியநாச்சி அம்மையாரின் தருமம் சைவபரிபாலன சபையின் அக்கறையினாலும் அமரர் N .K. மயில்வாகனம், திரு.வி.இராமநாதன் வேறு பல அன்பர்களின் உதவியினாலும் இன்று பொலிவுற்று விளங்குகின்றது.

நூற்றாண்டு பழமைவாய்ந்த சைவபரிபாலனசபை 1934ம் ஆண்டு முதல் புண்ணியநாச்சி தருமத்தைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் ஏராளமான சொத்துக்கள் இத்தருமத்திற்கு உண்டு.

இத்தருமத்தின் பிரதான நோக்கம் சிதம்பரம் மடத்தைச் சிறப்பாக நடத்துவதேயாகும். அத்துடன் சிதம்பர மடத்தில் குருபூசைகளும், அன்னதானமும் சிறப்புற நடத்தப்பட வேண்டும் என்பதுமே ஆகும்.

மடமும் மடத்தின் பணிகளும் தொடர்ந்து சிறப்புற நடைபெற தில்லைக்கூத்தன் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

த. சண்முகலிங்கம்

சபை மூத்த உறுப்பினர்.

**இறைவன் இல்லாத இடமில்லை. இறைவன் எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறான். ஆகையால் அந்த இறைவனுக்கு, மனம் குழைந்து வேண்டி, நாம் துளி உணவை நைவேத்தியமாகக் கொடுத்தாலும், அது உலகில் எல்லா உயிர்களுக்கும் உணவளித்தற்கு நிகரான பலனைக் கொடுக்கும் நைவேத்தியம் செய்வதின் தத்துவம் இதுதான்.**

- வாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதம்பரம் புண்ணியநாச்சி அம்மையார் திருமட

# புதிய கட்டடத் திறப்புவிழா

சைவ மக்களால் கோவில் என்றால் சிதம்பரம் நடராசர் கோவில் என்று போற்றப்படும் சிறப்பைப் பெற்றது சிதம்பரம். நீண்ட காலமாக ஈழத்தவர் பலர் சிதம்பரத்தில் பல அரிய பணிகள் செய்துள்ளனர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அங்கு செய்த பணிகள் பலரும் அறிந்ததே. சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை அமைத்து அவர் ஆற்றிய பணிகள் பல, அவ்வித்தியாசாலை இன்றும் சைவம் வளர்க்கும் கல்விக்கூடமாக ஓங்கி வளர்ந்துள்ளது. நாவலர் பெருமானுக்கு முன்பே ஞானப்பிரகாச சுவாமிகள் சிதம்பரத்தில் ஒரு குளம் அமைத்து, அங்கு வாழ்ந்து, அரிய பல நூல்களை எழுதிச் சைவத்திற்குப் பெரும் பணி ஆற்றினார். சிதம்பரத்தில் உள்ள ஞானப்பிரகாசர் குளமும், அதற்கு முன்னுள்ள சேக்கிழார் கோவிலில் அமைந்துள்ள ஞானப்பிரகாசரின் திருவுருவச் சிலையும் அவரின் பணிகளுக்கு ஞாபகச் சின்னமாக விளங்குகின்றன. இச்சேக்கிழார் கோவிலை நிறுவக் காணி வாங்கி விட்டவர் நாவலர் பெருமான்.

யாழ்ப்பாணச் சைவர்களுக்குச் சிதம்பரம் தாய்வீடு போன்றது. காங்கேசந்துறைக்கும் திருமறைக் காடெனப்படும் வேதாரணியத்திற்கும் இடையேயுள்ள கடலைக் கடந்து பாய்மரக் கப்பல்கள் பயணித்த காலங்களில் யாழ்ப்பாணத்தவர் அடிக்கடி சிதம்பரம் போவர். இப்புனித யாத்திரை நெடுங்காலம் தொடரும் மரபு. சிதம்பரம் சபாநாயகர் கோவிலைச் சுற்றியுள்ள வீதிகளில் யாழ்ப்பாணத்தார் தாம் சிதம்பரம் போகும் போது தங்குவதற்காகக் கட்டிய திருமடங்கள் பல இருந்தன. ஞானப்பிரகாசர் குளத்தை ஒட்டிய திருவீதியில் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட மடங்கள் உள்ளன. ஒவ்வொரு மடத்திற்கும் ஒவ்வொரு பெயருண்டு. கொக்குவிலார் கொக்குவில் மடத்தில் தங்குவர். காரைநகரார் காரைநகர் மடத்தில் தங்குவர். பல்வேறு குழுக்கள் சார்ந்த மடங்களாக அவை அங்குண்டு. இந்தியாவும் இலங்கையும் அந்நியராட்சியிலிருந்து விடுபட்டபின் கடவுச்சீட்டு, விசா, வெளிநாட்டுச் செலாவணி என்ற பல்வேறு தடைகளால் இப்புனித யாத்திரை மரபு வெகுவாகக் குறைந்துவிட்டது. இந்த நிலைமை சிதம்பரத்திலுள்ள சமூக விரோதிகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. பல மடங்கள் சமூக விரோதிகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளன.

ஏறத்தாழ நூற்றியிருபது வருடங்களுக்கு முன் சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் நிறுவப்பட்டது புண்ணியநாச்சி அம்மை திருமடம். இதன் நிர்வாகம் 1934 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் கீழ் வந்தது. நாற்சார் வீட்டு அமைப்பில் மிகவும் பழுதுற்ற நிலையிலிருந்த இம் மடத்துக் கட்டடங்கள் அகற்றப்பட்டு, அவ்விடத்தில் நவீன வசதிகளுடன் இம்மடம் மீளமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத் திறப்புவிழா 16.6.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கோலாகலமாக நடந்தேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடத்தின் முன் அமைந்துள்ள விநாயகர் கோவிலில் பூசை, அர்ச்சனை வழிபாடுகள் செய்யப்பட்டபின் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைக்கலைமாணிப்பட்டம் பெற்றவருமான திரு.வீ.உதயகுமார் அவர்களின் இறைவணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது. சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அறக்கட்டளை அறங்காவலர் தி க.சுவாமிநாதன் அவர்களின் மகள் வைத்திய கலாநிதி பத்மினி கபாலிமூர்த்தி அவர்கள் மங்கள விளக்கேற்றித் திருமுறை ஓதினார்கள். விழாவிற்குத் தலைமைவகித்த சென்னைப் பல்கலைக்கழகத்துச் சித்தாந் தத்துறையின் முன்னாட் தலைவர் பேராசிரியர் முனைவர் வை.இரத்தினசபாபதி அவர்கள் நந்திக்கொடியேற்றிச் சிறப்பித்தார். விழாவிற் பங்கேற்ற பிரமுகர்களுக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தபின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அறக்கட்டளைக் குழுத்தலைவர் திரு.எம்.சுப்பிரமணியபிள்ளை அவர்கள் கட்டடத்தைத் திறந்து வைத்தார். சிதம்பரநகர் மன்றத்தலைவர் திரு.எம்.எஸ்.என்.குமார் அவர்கள் முன்னிலை வகிக்க விழா நடைபெற்றது.

தலைமை தாங்கிப்பேசிய பேராசிரியர் வை.இரத்தினசபாபதி அவர்கள் ஈழத்துச் சைவமக்கள் ஆற்றிய சைவப்பணிகளை விளக்கி ஆறுமுகநாவலர் பெருமானின் நூல்களையே தன்னைப் போன்றவர்கள் முன்பு படித்ததாகக் கூறினார். நாவலரின் இலக்கண நூல்களும், சமய நூல்களும் தமக்கு வாழ்வை நெறிப்படுத்துபவையாக அமைந்தன. என்று கூறிய தலைவர், நாவலரின் வாழ்வும் பணியும் சைவமக்களுக்கு இன்றும் வழிகாட்டுபவையாக இருக்கின்றன என்றார்.

வாழ்த்துரை வழங்கிய வழக்கறிஞர் திரு.அ.சம்பந்தம் அவர்கள், ஈழத்தில் தொடரும் யுத்தநிலையால், அங்குள்ள தமிழர் பல இன்னல்களுக்கு ஆளாகினார்கள், பிற நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றார்கள், ஆயினும் தமது சமயத்தை அவர்கள் கைவிடவில்லை. சென்ற இடங்களிலெல்லாம் சைவத்தை வளர்க்கிறார்கள். மேலை நாடுகளில் இன்று பல சைவக்கோயில்கள் எழுந்திருப்பதும், சைவம் அங்கு பரவுவதும் ஈழத்தமிழரால்தான் எனக்கூறி அவர்களைப் பாராட்டினார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சைவசித்தாந்த கலாநிதியும் பொறியியலாளருமான திரு.க.கணேசலிங்கம் அவர்கள் தமது வாழ்த்துரையில் சைவசமய வளர்ச்சிக்கு ஈழத்தவர் செய்த பங்களிப்பை விளக்கிப்பேசினார். ஞானப்பிரகாசசுவாமிகள், ஆறுமுக நாவலர், காசிவாசிசெந்திநாதையர் போன்ற பெருமக்கள் ஈழத்தில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் சைவத்தைப் பேணிப் பாதுகாத்ததை விளக்கினார். சைவம் தூய்மையுடன் வளர்ந்த ஈழமண்ணில் இன்று சைவத்துக்கு உடன்பாடற்ற கொள்கைகளும் வழிபாடுகளும் புகுந்திருந்தன. இவை தமிழகத்தில் இருந்துதான் அங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன எனச்சுட்டிக் காட்டினார். இந்த அவல நிலையை மாற்றுவதற்குத் தமிழக சைவ அறிஞர்களும் நிறுவனங்களும் உடனடியாகச் செயற்படவேண்டும் என வலியுறுத்தினார். அழகுற அமைந்து இன்று திறப்பு விழாக்காணும் புண்ணியநாச்சி அம்மையார் மடம், யாத்திரிகர்களின் தங்குமடமாக மட்டுமன்றி, சைவநெறி பரப்பும் நிறுவனமாகவும் இயங்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த அவர், மடத்தின் மண்டபம் இற்கு ஏற்றதாக அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்த கலாநிதி கணேசலிங்கத்தின் உரைக்குப் பதிலுரைபோல், தலைமை தாங்கிய பேராசிரியர் சில விளக்கங்களைக் கூறினார். தமிழகத்தில் நிகழ்பவை ஈழத்திலும், ஈழத்தில் நிகழ்வை தமிழகத்திலும் சில தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவை தவிர்க்க முடியாதன என்றார் அவர்.

கட்டட அமைப்பை மேற்பார்வை செய்த பொறியியலாளரைச் சைவ பரிபாலன சபையின் புண்ணியநாச்சி அம்மைமட நிர்வாகத்துக்கான பிரதிநிதியும் புதிய கட்டடத்தைக் கட்டிமுடிக்கப் பெரிதும் உழைத்தவருமான திரு.வி. இராமநாதன் அவர்கள் கௌரவித்தார்.

சைவபரிபாலன சபையின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரும் முன்னாட் செயலாளரும் சிதம்பரத்தில் பல தடவைகள் நெடுநாட்தங்கியிருந்து கட்டட வேலைகளைக் கவனித்து ஆவன செய்தவருமாகிய திரு.த.சண்முகலிங்கம் அவர்கள் தமது நன்றியுரையில் சைவபரிபாலன சபையினதும் புண்ணிய நாச்சியம்மை திருமடத்தினதும் கடந்தகாலச் செயற்பாடுகளை விளக்கியதுடன், புதிய கட்டடத்தைக் கட்ட நிதியுதவியளித்தவர்களையும் துணை நின்றவர்களையும் போற்றிப் பாராட்டினார்.

அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கட்டடவேலைகளைக் குறுகிய காலத்தில் செய்வித்து முடித்ததற்காக திரு.த.சண்முகலிங்கம், திரு.வி.இராமநாதன் ஆகிய இருவரையும் விழாவிற்குச் சமுகமளித்திருந்தோர் பாராட்டி வாழ்த்தினர். விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் இரவு உணவு பரிமாறப்பட்டது.

நன்றி: இந்துசாதனம் 24.06.2002

# சிதம்பர நடராஜர் தரிசனம்

தில்லை நடராஜரைத் தரிசிக்கச் செல்லும் ஈழநாட்டு சைவ அன்பர்களுக்கு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் இலவச தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு கோயிலுக்குச் சமீபமாக, உள்ள மாலைகட்டித் தெரு 28ம் இலக்கத்தில் "புண்ணியநாச்சி" மடம் என்ற பெயரில் ஒரு தருமமடத்தை நடாத்தி வருகிறார்கள். வசதியான குளியலைறைகளுடன் இணைந்த தனிப்பட்ட அறைகள் குடும்பங்கள் தங்குவதற்கான வசதிகள் யாவும் உள்ளன. அடுத்தமுறை நீங்கள் சிதமபரம் செல்லும் போது புண்ணியாச்சிமடம் உங்களை வரவேற்கக் காத்திருக்கிறது.

சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்
28. மாலைகட்டித் தெரு. சிதம்பரம்.
விபரங்களுக்கு இலண்டன் 020 8942 8745


நன்றி: *Travel & Tour Services, Singapore*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு சுவாமிநாதன் அவர்களின் மகள் மகப்பேற்று வைத்திய நிபுணர் பத்மினி கபாலமூர்த்தி அவர்கள் விழாவிற்கு வருகை தந்த பொழுது திருமதி செல்வி கணேசன் அவர்கள் மலர்மாலை சூட்டி வரவேற்கின்றார்.



சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் இரத்தினசபாபதி அவர்களை சபை மூத்த உறுப்பினர் திரு .த.சண்முகலிங்கம் மலர்மாலை சூட்டி வரவேற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் கௌரவ சட்ட ஆலோசகர் (சிதம்பரம்) திரு.சம்பந்தன் அவர்களை யாழ்.பிரபல வர்த்தகர் திரு.குழந்தைவேலு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.



சிதம்பரம் மாநகரசபை முதல்வர் திரு.குமார் அவர்களுக்கு கொழும்பு வர்த்தகர் திரு.க.செல்வராசா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக - ஈழ வரலாற்றுப் பதிவொன்று ஒளிர்கிறது

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நிர்வாகத்துக்குட்பட்ட சிதம்பரம் புண்ணியநாச்சி மடத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா ஆனித்திங்கள் இரண்டாம் நாள் (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் கோலாகலமாக நடைபெறவுள்ளது எனச் சிதம்பரத்திலிருந்து சபைப்பிரதிநிதி திரு.வி.இராமநாதன் அவர்களும், சபையின் மூத்த உறுப்பினரும், முன்னாட் செயலாளருமாகிய திரு.த.சண் முகலிங்கம் அவர்களும் அறியத்தந்துள்ளனர்.

சிதம்பரம் மாலைகட்டித்தெரு, இருபத்தெட்டாம் இலக்கத்தில் புண்ணியநாச்சி அம்மையார் திருமடம் அமைந்துள்ளது. புண்ணியநாச்சியம்மை தருமம் பற்றிய ஆதார பூர்வ தகவல்கள் அடங்கிய கட்டுரையொன்றை இந்துசாதனம் புத்தகம் 110 இதழ் 10 (பிரமாதி தை இதழ்) இல் காணலாம். நாற்சார் வீட்டு வடிவில் அமைந்திருந்த பல தசாப்தங்கள் பழைமை வாய்ந்த இம்மடக் கட்டடம் - தனது வாழ்காலத்தைத் தாண்டிய நிலையில் - மிகப் பழுதுற்று இருந்ததால் கடந்த பல வருடங்களாக ஈழத்திலிருந்து சிதம்பரம் செல்வோர் இம்மடத்தில் தங்கிச்செல்ல முடியாதிருந்தது. ஆனி உத்தரம், மார்கழித் திருவாதிரை ஆகிய உற்சவ காலங்களில் மட்டும் அன்னம் பாலிப்பு நடைபெற்று வந்தது.

புண்ணியநாச்சி மடத்தை இக்காலத்திற்கேற்ற வசதிகளுடன் புதிதாக மீள அமைக்கப்பட வேண்டிய தேவை பலராலும் பலவருடகாலமாக உணரப்பட்ட தொன்றாகவிருந்த போதிலும் அப்பாரிய கடமையை முன்னின்று செய்து ஒப்பேற்ற எவரும் முன்வரவில்லை. 1999 ஆம் ஆண்டளவில் இம்மடம் பற்றிய விடயங்களைக் கவனிப்பதற்கு சைவபரிபாலன சபையால் அதிகாரம் அளிக்கப்பட்டவராகிய கொழும்பு வாழ் பிரபல சமய, சமூக சேவையாளர் திரு.வி.இராமநாதன் அவர்களும், சபையின் மூத்த உறுப்பினரும் முன்னாள் செயலாளருமாகிய திரு.த.சண்முகலிங்கம் அவர்களும் பழைய கட்டடத்தை அகற்றிவிட்டு அவ்விடத்தில் புதிய கட்டடமொன்றை அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

புதிய இரண்டடுக்கு மாடிக்கட்டட மொன்றை அமைப்பதற்கான வரை படங்களை வரைவித்து சபையின் அங்கீகாரத்தையும் சிதம்பரம் நகர மன்ற அநுமதியையும் பெற்றுக் கொண்டனர். பிரமாதி வருடம் கார்த்திகைத்திங்கள் இருபத்தொன்பதாம் நாள் (15.12.1999) சுபநேரத்தில் புதிய கட்டடத்திற்கு அத்திபாரமிடப்பட்டது. (இந்துசாதனம் புத்தகம்110, இதழ் 10 செய்தியைப் பார்க்க)

இவ்விரு பரோபகாரிகளும் பல தடவை கொழும்புக்கும் சிதம்பரத்துக்குமி டையே பயணித்தும் சிதம்பரத்தில் பல மாதங்கள் தங்கியிருந்தும், சைவாபிமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட கொழும்பிலும் மேலை நாடுகளிலும் வாழும் சில பரோபகாரிகளிடம் நிதியுதவி பெற்றும் தமது சொந்தப்பணத்தைச்செலவு செய்தும் அரிதின் முயன்று இத்தர்ம கைங்கரியத்தை விரைவாகச் செய்து முடித்துள்ளனர். சைவபரிபாலன சபையார் புண்ணியநாச்சி தரும நிதியிலிருந்து ஒருலட்சரூபா வரை ஒதுக்கியிருந்தனர். இலங்கை நாணயத்தில் சுமார் நாற்பது இலட்ச ரூபா செலவில் அமைந்த இப்புதிய கட்டடம் ஏறத்தாழ நாலாயிரம் சதுர அடி தளப்பரப்பை இரண்டு தளங்களில் கொண்டு சகல நவீன வசதிகளையும் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

தரைத்தளத்தில் செயலகம், பண்டகசாலை, சமையலறை ஆகியவற்றுடன் வருகையாளர் தங்கும் அறைகள் ஆறும், மட பராமரிப்பாளருக்கு இரண்டு அறைகள், சமையலறை, குளியலறை, கழியலறை கொண்டதோர் விடுதியும் அமைந்துள்ளது.

மேற்தளத்தில் வருகையாளர் தங்கும் அறைகள் ஆறும், நாற்பது அடி நீளமும் இருபது அடி அகலமும் கொண்ட சமய விழாக்கள் நடத்தக் கூடியவொரு விசாலமான மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இன்னுமோர் தளம் அமைக்கக் கூடியவகையில் உறுதியான அத்திபாரமும் கொங்கிறீட் தூண்களும் அமைக்கப்பட்டுள்ளது.

பன்னிரண்டு வருகையாளர்கள் தங்கும் அறைகளுக்கும் செயலகத்துக்கும் வெவ்வேறாக குளியல், கழிப்பு அறைகள் இணைக்கப்பட்டுள்ளன. முழுத் தரைக்கும் சலவைக்கல் பதிக்கப்பட்டுள்ளது. மடத்துக்கு குழாய்க் கிணற்றிலிருந்தும் நகர் மன்ற நீர் விநியோகத் திட்டத்திலிருந்தும் தண்ணீர் கிடைக்கிறது.

இம்மடத்தில் அமைக்கப்பட்டுள்ள பன்னிரண்டு அறைகள் கொழும்பிலும் வெளி நாடுகளிலும் வாழும் சைவ அன்பர்கள் சிலரது உபயமாக அமைக்கப்பட்டதாக அறிகிறோம். அவை யாருடைய ஞாபகமாக அமைக்கப்பட்டன என்பது அந்தந்த அறை முகப்புகளில் பொறிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த சைவ அன்பர்கள் - அவர்கள் இப்போ எந்நாட்டில் வாழ்ந்தாலும் - இம்மடத்தில் இலவசமாகத் தங்கிச்செல்லலாம். பத்து நாள்களுக்கு மேல் தங்குவதாயின் சபையின் முன் அநுமதி பெற்றுச்செல்லுதல் வேண்டும்.

இல28, மாலைகட்டித் தெருவில் அமைந்துள்ள புண்ணியநாச்சி அம்மை மடம், சிதம்பர சபாநாயகர் கோவில், சிதம்பரம் பேருந்து நிலையம் ஆகியவற்றுக்கு மிக அண்மையில் அமைந்துள்ளது.

சபாநாயகர் கோவிற் கீழரத வீதியிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்று, கீழரத வீதி - தெற்குரத வீதிச் சந்தியைக் கடந்து நேராக (உமையாள் வீதி, வழியாகச்) சென்றால், அது மாலைகட்டித் தெருவை அடையும். மாலைகட்டித் தெருவில் இடது பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றால் புண்ணியநாச்சியம்மை மடத்தைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருந்து நிலையத்திலிருந்து மேற்கு நோக்கி வேணுகோபால் தெரு வழியாகச் சென்று தெற்கே நாராயணன் தெருவுக்குத் திரும்பிச் சென்றால் நாராயணன் தெரு - மாலைகட்டித் தெருச்சந்தியை அடையலாம். அச்சந்தியிலேயே புண்ணியநாச்சி அம்மை திருமடம் அமைந்துள்ளது.

சைவ உலகின் கேந்திர நிலையமான சிதம்பரத்தில் யாழ்ப்பாணத்தவர்களுக்குச் சொந்தமான பல மடங்களில் ஒன்று இன்று மீளமைக்கப்பட்டிருப்பது மூலம் முக்கிய தேவையொன்று பூர்த்திசெய்யப்பட்டிருப்பதுடன் தமிழக ஈழவரலாற்றுப் பதிவொன்று அழிந்து போகாது புதுமெருகுபெற்று ஒளிர்வடையச் செய்யப்பட்டுள்ளது.

**நன்றி: இந்துசாதனம் 26.05.2002**

# சிதம்பரத்தில் ஈழத்தவர் மடம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் சிதம்பரம் புண்ணியநாச்சி மடம் கட்டிடத்திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தமிழகத்தில் சிதம்பரம் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அறக்கட்டளைக் குழுத்தலைவர் எம். சுப்பராயப்பிள்ளையினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இறைவணக்கம் இசைக்கலைமணி வீ. உதயகுமார், மட்டக்களப்பு. மங்கள விளக்கேற்றல், சிதம்பரம் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அறக்கட்டளை அறங்காவலர் க.சுவாமிநாதன், டாக்டர் திருமதி பழநி சுவாமிநாதன் - சிதம்பரம் தலைமை வகித்து இடபக் கொடியேற்றல், பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி சென்னை.

முன்னிலை வகித்தல் சிதம்பரம் நகர் மன்றத் தலைவர் எம். எஸ். என். குமார். வாழ்த்துரை வழக்கறிஞர் அ. சம்பந்தம் - சிதம்பரம், கயிலைப் புனிதர் இரா. இராமநாதன் சிதம்பரம் சைவ சித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கம் - யாழ்ப்பாணம். நன்றியுரை த.சண்முகலிங்கம் யாழ்ப்பாணம் கட்டிட அமைப்பு - மேற்பார்வை செய்த பொறியியளாளரைக் கௌரவித்தல், வி. இராமநாதன் - யாழ்ப்பாணம்.

இலங்கையிலிருந்து செல்லும் யாத்திரிகர்கள் தங்குவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன. சிதம்பரம் மாலைக் கட்டித்தெரு, 28 ஆம் இலக்கத்தில் இந்த புண்ணியநாச்சி மடம் அமைந்துள்ளது.

**நன்றி: தினக்குரல் 15.06.2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரம் புண்ணியநாச்சி மடம் பெரும் வரப்பிரசாதம்

சி.த.மார்க்கண்டு, *B.A., SLAS* -
( வவுனியா முன்னாள் அரச அதிபர், வடகிழக்கு மாகாணசபையின் விவசாய காணி, நீர்ப்பாசன அமைச்சின் இளைப்பாறிய செயலர்)

நான் எனது குடும்பத்துடன் இவ்வருடம் மே மாதம் தமிழ்நாட்டிற்கு யாத்திரையாகச் சென்று ஜூன் மாதம் நாடு திரும்பினேன்.

இந்துசாதனம் மூலமும், வேறோர் செய்திப் பத்திரிகை மூலமும் சிதம்பரத்தில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் நிர்வகிக்கும் புண்ணியநாச்சியம்மையார் மடம் புதிதாகக்கட்டப்படுவதாக அறிந்தேன். ஆகவே சிதம்பரம் செல்லும்போது புண்ணிய நாச்சி அம்மை மடத்தையும் பார்வையிட ஆவலாகவிருந்தேன்.

நாம் சிவகாமி அம்மைசமேதராக அருள்பாலிக்கும் சிதம்பர சபாநாயகர் கோவிலுக்கு 28.05.2002 ஆம் திகதி காலையில் சென்று கூத்தப் பெருமானைத் தரிசித்தோம். வழிபாடுகள் முடிந்தபின் தீட்சிதர் ஒருவரிடம் கேட்டு, புண்ணியநாச்சி அம்மை மடம் பற்றி அறிந்து கொண்டோம். அவர் கூறிய குறிப்பைக் கொண்டு மாலைகட்டித் தெருவை அடைந்தோம். எங்களுடன் திருகோணமலையில் இருந்து திரு.எஸ்.சுந்தரலிங்கம் குடும்பத்தினரும் வந்திருந்தனர்.

அழகாக அமைக்கப்பட்டு, வேலைகள் முடியும் தறுவாயில் இருந்த அக் கட்டத்தைக் காணப்பெருமிதமாகவிருந்தது. அறைகளைச் சைவ அன்பர்கள் தமது உறவுகளின் ஞாபகார்த்தமாக இலவசமாகக் கட்டிக் கொடுத்துள்ளனர். மேல் மாடியில் மண்டபம் அமைந்துள்ளது. மிக அழகுறக்கட்டப்படுகிறது. தேவையான சகல வசதிகளையும் கொண்டுள்ளது. பெறுமதிமிக்க ஒன்று. இந்தக் கட்டடம் சம்பிரதாய பூர்வமாக 16.06.2002 இல் திறந்து வைப்பதற்கு அப்போ அழைப்புகள் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.த.சண்முகலிங்கம் அவர்கள் இந் நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தார். எமக்கும் அழைப்பிதழ் கிடைத்தது.

திரு த.சண்முகலிங்கம் அவர்களைப் பார்த்ததும் எமது மகிழ்ச்சியை இரட்டிப் பாக்கியது.

சைவத்தொண்டராகவும், சமூகத் தலைவராகவும், நல்லவராகவும், வல்லவராகவும் காட்சியளித்தார். அவருடைய தோற்றம் ஆஜனுபவனாக இருந்தது. பேசப் பழக இனியவராக அன்பும் பண்பும் நிறைந்தவராக இன்முகத்துடன் காணப்பட்டார்.

திரு.த.சண்முகலிங்கம் அவர்களிடம் எமது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆரம்பித்து நடத்திய சிதம்பரம் பாடசாலை, மற்றும் சேக்கிழார் கோவிலின் இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொண்டோம். அவை நாவலர் அறக்கட்டளை யின் பொறுப்பில் உள்ளன. வித்தியாசாலை நல்ல முறையில் நடைபெறுகிறது. புண்ணியநாச்சி மடத்தின் இரு பக்கங்களிலும் வித்தியாசாலைக்கு நிலங்கள் உண்டு.

மடத்தின் பொறுப்பாளராக திரு.ஞானஸ்கந்தன் என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார். திரு.ஞானஸ்கந்தன் இளையவர். இனிய சுபாவம் கொண்டவர். எளிமை யானவர், அடக்கமும் சீரிய குணமும் அவரிடத்தே காணப்பட்டது.

இலங்கையிலும் பிற நாடுகளிலும் இருந்து செல்லும் சைவ அடியார்கள் தங்கிச் செல்ல சிறந்த வசதிகள் படைத்த இடமாக புண்ணியநாச்சிமடம் கட்டப்பட்டுள்ளது. இது ஒரு வரப்பிரசாதமாகும். இதனைக் கட்டுவித்த சைவபரிபாலன சபைக்கும், அர்ப்பணிப்புடன் செயற்படும் திரு.சண்முகலிங்கம் அவர்களுக்கும் சைவ உலகம் கடமைப்பட்டுள்ளது. சைவ பரிபாலன சபையின் சேவை மெச்சிப்போற்றி வாழ்த்துதற் குரியது. இது ஒரு சாதனை. சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சி. இப்படியான நன்முயற் சிகள் இன்னும் நடைபெற வேண்டும்.

தமிழ் நாட்டில் எமது சைவ பரிபாலன சபையின் தொண்டுகளின் வெற்றி, தமிழக அரசினதும் சைவ அன்பர்கள் - குறிப்பாக சிதம்பரம் வாழ் சைவ அன்பர்களது - புரிந்துணர்வு, ஆதரவு, உதவி, ஒத்தாசை ஆகியவற்றில் பெரிதும் தங்கியுள்ளது.

இந்தப் புண்ணிய கைங்கரித்தைச் செய்துவரும் சைவபரிபாலன சபையினர், அவர்கட்கு உதவியாகவுள்ள திரு.த. சண்முகலிங்கம், திரு.ஞானஸ்கந்தன் போன் றவர்கள் நலமுடன் வாழ்ந்து இறைபணி, சமூகப்பணி, தொண்டுகள் பலதொடர்ந்து செய்ய எல்லாம்வல்ல கூத்தப்பெருமானை வேண்டி இறைஞ்சுகிறேன்.

* * *

(சிதம்பரம் புண்ணியநாச்சிமடம், சேக்கிழார் கோயில் பற்றி இந்துசாதனம் காலத்துக்குக் காலம் வெளியிட்ட செய்திகளை வாசித்த ஈழத்தவர் பலரும் சிதம்பர தரிசனத்திருச் செல்லும் போது புண்ணியநாச்சி மடத்தில் தங்கியிருந்து சிதம்பர தரிசனத்துடன் சேக்கிழார் கோவிலிலும் வழிபாடாற்றி வருகின்றனர். இவ்வாறு சிதம்பரம் சென்றுவந்த பலரும் புண்ணியநாச்சி மடத்தின் புதிய கட்டடம் ஈழத்து யாத்திரிகர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று நேரடியாகவும், கடிதம் மூலமும் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற கடிதங்களில் ஒன்று இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நன்றி: இந்து சாதனம் 24.07.2002

ஆசிரியர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமடத்தின் திறப்புவிழா

சென்ற சுமார் ஒரு மாத காலமாக சென்னையில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறேன். நலம் அடைந்து வருகிறேன். மேலும் சில நாள்கள் இங்கு தங்கி இருக்க வேண்டியுள்ளது.

தங்களுடைய விடாமுயற்சியாலும், அயராத உழைப்பினாலும் ஸ்ரீலங்கா யாழ்ப் பாணத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் ஓர் அழகிய கட்டிடத்தைக் கட்டி 16.06.2002இல் கட்டிடத் திறப்புவிழா செய்ய இருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கக்கூடியது.

இலங்கை வாழ் தமிழ்மக்கள் சிதம்பரம் வரும்போது செளகர்யமாகத் தங்கி நடராஜப் பெருமானை வழிபடப் பேருதவி செய்திருக்கிறீர்கள்.

தங்களுடைய இச்சீரிய பணிக்கு மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களுடைய புண்ணிய நாச்சி திருமடத் திறப்பு விழாவிற்கு நேரில் வந்து கலந்து கொள்ள இயலாத சூழ்நிலையில் உள்ளேன்.

எனது மனைவியும் என்னுடன் இருப்பதால் அவரும் விழாவில் கலந்து கொள்ள இயலவில்லை.

விழாவிற்கு தாங்கள் நேரில் வந்து அன்போடு அழைத்தீர்கள். மன்னிக்கவும். சிதம்பரம் திரும்பிய உடன் தங்களைச் சந்திப்பேன்.

ஆனந்தநடராஜப் பெருமான் திருவருளால் விழா சிறப்பாக நடைபெறவும், திருமடத்தின் நற்பணிகள் தொடர்ந்து செயற்படவும் எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிதம்பரம்,** **க.சுவாமிநாதன்**

**12.06.2003**

(திரு.க.சுவாமிநாதன் அவர்கள்
சிதம்பரம் நாவலர் பாடசாலையின்
முன்னாள் அதிபரும், இந்நாள் அறங்காவலருமாவார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா பூஷணம் சிவாகமஞானபானு
**பிரதிஷ்டா கலாநிதி**
**சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்**
ஆதீனகுரு ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் தேவஸ்தானம் - நயினை

"Pirathishta Bhooshanam, Sivagamagnanabbanu",
**Pirathishta Kalanithi**
**Sivacharya Swaminatha Parameswara Gurukkal**
*ADINA CHIEF PRIEST*
**Sri Nagabhooshani Ambal Devasthanam,**
*Nainativu.*

**உயர்திரு வீ.இராமநாதன் அவர்கள்,**

**உயர்திரு த.சண்முகலிங்கம் அவர்கள்,**

**சபை முத்த உறுப்பினர்.**

**அன்பும் பண்பும் நிறைந்த பெருமையுடையீர்!**

சிதம்பரம் புண்ணிய நாச்சியார் கட்டிடத் திறப்புவிழா அழைப்பிதழ் கிடைத்தது. நன்றியும் ஆசியும் உரியதாகுக.

புண்ணிய நாச்சியார் தருமப் பணியைத் தொடர்ந்து பலகாலம் சிரமங்கள் மத்தியில் நல்லதாகக் கட்டி, சிதம்பரம் வரும் அடியார்கட்கு தங்குவதற்கு நல்ல தங்குமிடம் அமைத்து, திறப்புவிழாவும் நடைபெறுவது தங்கள் இருவரது செயற்கரிய பெருமுயற்சி. இதை என்றும் சைவ உலகம் பாராட்டவே செய்யும். இப் பணிக்கு பணம், பொருள்கள், சரீர உதவி செய்த பெரியோர்கள் அனைவருக்கும் ஸ்ரீ நடராஜப் பெருமான் நலன்கள் யாவும் தரவேண்டுமென வணங்கி வாழ்த்துகிறேன்.

*51/33A/1, Swarna Road, Colombo - 06*
**07.06.2002**

**தங்கள் மதிப்பிற்குரிய**
**க.பரமேஸ்வரக் குருக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரம்
# புண்ணியநாச்சி மடம்

கடந்த மாதம் சிதம்பரம், தில்லை நடராசனைத் தரிசிக்கும் பேறு பெற்றேன். அச்சமயம் ஐந்து நாள்கள் நீங்கள் புதிதாகக் கட்டிமுடித்து சைவ உலகிற்கு அன்பளிப்புச் செய்த புண்ணியநாச்சி மடத்தில் தங்கினேன். மடத்து மேலாளரின் அன்பான வரவேற்புக் கண்டு வியந்தேன்.

காற்றோட்டமுள்ள விசாலமான அறைகள், நவீன கழியறைகளுடனும் குழியலையுடனும் மின்விசிறி மற்றும் மின்சார வெளிச்சத்துடனும் சகல தளபாடங்களுடனும் மாபிள் பதிக்கப்பட்டு பளிச்சென்று எல்லா அறைகளும் மிளிர்கின்றன.

தானம் கொடுக்கப் பல சைவ உள்ளங்கள் இவ்வையகத்து இருப்பினும் அதனை ஒன்று சேர்த்து யாழ்ப்பாண சைவ மக்களுக்கு என்றும் அழிக்க முடியாத நவீனகாலத்துச் சகல வசதிகளுடனும் கூடிய இருமாடிக் கட்டிடம் மாலை கட்டித்தெருச் சந்தியில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் புண்ணியநாச்சி மடம் என்னும் பெயர்ப்பலகை தாங்கி கம்பீரமாக எழுந்து நிற்கிறது. தங்கள் சபைக்கு சைவ உலகு மிகக்கடப்பாடு உடையது.

இத் திட்டத்தைச் சபையில் முன்மொழிந்த சைவ அடியாருக்கும், தமது சொந்தக் கருமங்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு இந்தியா சென்று மாதக் கணக்காகத் தங்கியிருந்து கண்ணும் கருத்துமாக , ஏமாந்து போகாது, பொருள் விரயம் இல்லாது திட்டமிட்டபடி உரியகாலத்தில் இம்மடத்தைக் கட்டவும், கிடைத்த அன்பளிப்புக்களைச் சரியாகச் செலவிட்டும், கணக்குகளைச் சரிவரப் பேணியும், குறை நிறைகாணில் தமது சொந்தப் பணத்தையும் செலவுசெய்து இத் திட்டத்தைப் பூர்த்தி செய்த பெரியார் ஐயா அவர்களுக்கு யாழ்ப்பாண சைவ மக்கள் அனைவரும் எப்படி நன்றிக்கடன் செலுத்துவர். வாழ்க அவர் தம் பணி.

'என் கடன் பணி செய்து கிடப்பதே'

யாழ்ப்பாண சைவ பரிபாலனசபை இது போன்ற கைங்கரியத்தை யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசாமி ஆலய சுற்றாடலிலும், கதிர்காமத்திலும் செயல்படுத்தினால் இலங்கைச் சைவ அடியார்கள் பெரு நன்மையடைவர். இது சிந்திக்கத்தக்கது. வாரி வழங்க சைவ அடியார்கள் உலகம் முழுக்க எல்லா நாடுகளிலும் வியாபித்துள்ளனர். முயற்சி திருவினையாக்கும்.

பொ.இராமநாதன்.
ஒரு சைவ அடியார்.


495/1, கொலிங்வூட் இடம்,
வெள்ளவத்தை.
கொழும்பு - 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்திபாரக்கல் நாட்டுவதற்கான ஆரம்பப் பூசைகள்,
ஆச்சாரியாருடன் விழா நாயகர் திரு.வீ.இராமநாதன்




கால்கோள் விழா நிறைவின் பின்
குருமாருக்கு அன்பளிப்பு வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மடப்பொறுப்பாளர் திரு.தி.கணேசன்,பொறியியலாளரும் ஒப்பந்த
காரருமாகிய திரு.இரமேஷ்
(விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பொறியியல் கல்லூரி)
நிறைவு நிகழ்வுகளை அவதானிக்கின்றார்.



அத்திபாரக்கல் நாட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டிலுள்ள பொள்ளாப்பிள்ளையார்
# சங்கடஹர சதுர்த்தி அன்னதானம்

'என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் – புன்னை
விரசுமகிழ் சோலைவியன் நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத்தான்'

தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் சிவ தரிசனத்திற்கு மிகச் சிறந்த இடம் சிதம்பரம். இங்கு எழுந்தருளியிருக்கும் தில்லை நடராஜர் கோவிலில் ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் நடைபெறும் ஆருத்ரா தரிசனவிழா- சைவ சமயத்தவர்கள்- வாழ்க்கையில் ஒரு முறையாவது பார்த்துப் பயனடைய வேண்டிய பெருவிழா ஆகும்.

இங்கு கொழும்பில் பிரபல வர்த்தகர்களான திரு. சண்முகலிங்கம், திரு. இராமநாதன் ஆகியோரின் விடாமுயற்சியால் உலகில் பல பாகங்களிலுள்ள தமிழன்பர்களின் உதவி கொண்டு, புண்ணிய ஆச்சிமடம் என்ற விடுதியைக்கட்டி எழுப்பியுள்ளனர். இலங்கைத் தமிழர்கள் வசதியாகவும், இலவசமாகவும் தங்கவசதி செய்துள்ளனர். பாராட்டப்பட வேண்டிய அருமையான சேவை.

சிதம்பரத்திலிருந்து 18 கிலோமீற்றர் தூரத்தில் திருநாரையூரில் வியாபித்திருக்கின்ற தொன்மை வாய்ந்தஷேத்திரம் "பொள்ளாப் பிள்ளையார் என அழைக்கப்படுகின்ற பொள்ளாப்பிள்ளையார் கோவில் (பொள்ளாப் பிள்ளையார் உளியால் செதுக்கப்படாத பிள்ளையார்.) இக் கோவிலுக்கும், சிதம்பரத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. தன்னை அண்டிவந்து அடிபணியும் அன்பர்தம் முன் செய்வினையை முழுதறுத்து நன்மை செய்யும் நாயகன் திருநாரையூர் அரசுமகிழ் அத்திமுகத்தான். சைவத்தின் பெருமையினை விளக்குவன திருமுறைகள். திருமுறைகள் இல்லா விட்டால், சைவம் இல்லை என்று துணிந்து கூறலாம். அத்தகையை பெருமைமிக்க திருமுறைகள். சிதம்பரத்தில் வாயு மூலையில் ஒரு அறையில் இருக்கின்றன என்று ராஜராஜசோழ மன்னனுக்கு அறிவுறுத்திய பொள்ளாப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பியுடன் அங்கு இன்றும் அவர் திருமுறை காட்டிய விநாயகர் என்றே அழைக்கப்படுகின்றார். தலவிருட்சம் புன்னை மரம், நீலோற்பல தடாகம் - புண்ணிய தீர்த்தம். தும்பிக்கையானிடம் நம்பிக்கை வைத்தால், வெம்பகை ஒழித்து அம்புவியில் நம்மைச் சிறப்புடன் வாழ வைப்பான்.

**'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!'** என்ற கூற்றுக்கு ஏற்ப, இத்தலத்தில் ஒவ்வொரு மாதமும், சங்கடஹர சதுர்த்தி தோறும் அன்னதானம் நடைபெறுகின்றது. திருநாரையூர் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட விவசாயிகள் செறிந்துள்ளகுக்கிராமம் இருப்பினும் ஒவ்வொரு சதுர்த்தி விழாவுக்கும் ஆயிரக்**கணக்கில் கிராம** மக்கள் கலந்துகொள்வர். காலை முதல் மாலை வரை நடக்கும் அபிஷேகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைகளிலும், அன்னதானத்திலும் பங்குபற்றிப் பலனடைவோர், இரவு வந்ததும் வீடு திரும்புவர்.

மிக விரைவில் கனடாவிலும் இந்த அன்னதானப் பணிக்கு நிதி சேகரிக்க உள்ளனர். தமிழ் மக்கள் தங்களாலான உதவிக் கரம் நீட்டி இந்த முயற்சி வெற்றிபெற ஊக்கமும், ஆக்கமும் அளிக்க மனமுவந்து முன்வரவேண்டும். **'சிறுதுளி பெருவெள் ளம்.' 'உங்கள் சிறிய அன்பளிப்பு பலவறிய மக்களுக்குப்பெரிய அளவில் பயனளிக்கும்.**

திருப்பனந்தாள் ஆதீனத்துக்கு உட்பட்ட திருத்தலமாகையால் பெரியார் சுவாமிகளின் ஆசியோடு, சிதம்பரம் தில்லைவாழ் அந்தணர்களுள் பிரபல்ஜம் வாய்ந்த பாலஜோதிடர் வெங்கடேச தீட்சிதரின் முயற்சியினால், ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார் அன்னதான டிரஸ்ட் ஆரம்பிக்கப் பெற்று, நிதி சேகரித்து அன்னதானம் வழங்கி வருகின்றனர்.

'யாவர்க்கும் ஆம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கின்னுரை தானே.

என்ற திருமூலர் திருவாக்குக்கு அமைவுற இந்த அன்னதான நற்பணிக்கு கனடாவாழ் தமிழ் மக்களும் தங்களை இணைத்து இறையருள்பெற முன்வருவோமாக.

நன்றி: உதயன் - கனடா.

# புண்ணியநாச்சி மடம்

மாலை கட்டித்தெருவில் அமைந்திருக்கும் இலங்கை யாழ்ப்பாண சைவபரிபாலன சபைக்கு உரிய புண்ணியநாச்சிமடம் என்ற மடம் திருத்தி அமைக்கவேண்டிய நிலையில் இருந்தபடியால் அதைப் புதுப்பித்து, நவீன முறையில் ஒருபெரிய மடம் கட்டவேண்டும் என சைவபரிபாலன சபை நிர்வாகிகள் ஆயத்தப்படுத்த வேண்டியதை அறிந்தேன். நான் இங்கு வந்தபோது கர்நாடகா சுற்றுலாவில் அறிமுகமான ஒரு பெரியவர் சிவதொண்டர் திரு.சண்முக லிங்கம் ஐயா அவர்கள் அடியேனை இக்கோயிலில் சந்தித்தபோது மண்டபத்தின் அடிக்கல் நாட்டு வைபவத்திற்கு வரும்படி அழைப்புக் கொடுத்தார். அந்த நந்நாளில் அடியேனுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபடியால் அந்த வைபவத்தில் கலந்து கொண்டது இறைவன் சங்கல்ப்பம். பெரும் தொகையான பணத்தை முதலீடு செய்து திரு.சண்முகலிங்கம் ஐயா அவர்களும் திரு.இராமநாதன் ஐயா அவர்களும் கட்டிடவேலைகளை ஆரம்பித்தனர். எமது பெற்றோர்களின் நினைவாக அடியேனுக்கும் இந்த மடத்தின் ஓர் அறைக்கு அன்பளிப்புச் செய்ய இறைவன் திருவருள் கிடைத்தது. இரு வருடத்திற்குள் பன்னிரண்டு அறைகளும், ஒரு திருமணமண்டபமும் கட்டிமுடித்து திறப்புவிழா 2002 ம் ஆண்டு நடைபெற்றது.

இந்த மடத்தின் முழுப்பொறுப்பையும் திருவாளர் கணேசன் குடும்பம் கவனித்து வருகிறார்கள். மடத்தில் தங்க வருபவருக்கு நல்ல உதவியாக இருக்கிறார்கள். மூன்று தலைமுறையாக இக்காணியில் குடிகொண்டு இருந்தபடியால் இந்த சிவசொத்து மற்றவர்களால் கவரப்படாது பாதுகாப்பாக இருந்தமைக்கு எமது யாழ்ப்பாண சைவ பரிபாலன சபை நன்றியுடன் அவர்கள் குடியிருப்பதற்கு நிலையான பிரத்தியேகமான இருப்பிடம் இங்கே அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

நன்றி: இந்திய யாத்திரை அநுபவம். ஸ்ரீ பரமேஸ்வரி சரவணமுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டில் ஈழத்தடயங்களின் திருநோக்கம்

கங்கைக் கரையில் காசி விசுவநாதர் விசாலாட்சியுடன் இருக்கிறார். அங்கு போய் நேரில் வழிபட முடியாதவர்கள், தமிழ் நாட்டிலேயே தமது ஊர்களுக்கு காசியைச் சேர்ந்த பெயரை வைத்து வழிபட்டுக் கொள்வார்கள். அவற்றுட்சில, சிவகாசி, தென்காசி, காசிதர்மம் என்ற தமிழ்நாட்டு ஊர்கள், சிங்கள இன வெறித்தாக் குதல்களால் கதிர்காமத்துக்குப் போக முடியாதவர்கள் யாழ்ப்பாணத்தின் நல்லூரில் கதிர்காமத் திருவிழா கொண்டாடுவர்.

மார்கழியில் யாழ்ப்பாணக் காரைதீவில் மாதம் முழுவதும் திருவிழா, அங்கு ஈழத்துச் சிதம்பரக் கோயிலில் பாடும் திருப்பள்ளி எழுச்சியும், திருவெம்பாவையும் தில்லையில் கூத்தப்பெருமானுக்கே கேட்குமாம். இலங்கை அரசின் தடைகளைத் தாண்டி, தமிழ்நாட்டில் சிதம்பரத்துக்குப் போக முடியாதவர்கள் மார்கழி முழுவதும் ஈழத்துச் சிதம்பரத்தில் கூடுவார்கள். தில்லைச் சிற்றம்பலம் ஈழத் தமிழரின் நெஞ்சங் களில் நிறைந்த கோயில். யாழ்ப்பாணத்துச் சைவர்களுக்குச் சிதம்பரம் தாய்வீடு.

காங்கேயன்துறைக்கும் திருமறைகாட்டுக்கும் இடையேயுள்ள கடலைக் கடந்து பாய்மரக் கப்பல்கள் பயணித்த காலங்களில் யாழ்ப்பாணத்தவர் அடிக்கடி சிதம்பரம் போவர். தில்லைக் கூத்தனை வழிபடுவர். திரும்பி யாழ்ப்பாணம் வருவர்.

இப் புனித பயண மரபு நெடுங்காலம் தொடர்வது வழிவழியாக அடிதவறாமல் யாழ்ப்பாணத்தவர் சிதம்பரம் போய் வருவதை நெறியாகக் கொள்வர்.

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் தில்லைத் திருக்கோயிலுக்குச் சொந்தமான காணிகள் ஏராளமாக உள்ளன. ஆண்டுதோறும் தில்லைவாழ் அந்தணர் சிலர் யாழ்ப்பாணம் வருவதும் அக்காணிகளின் வருமானத்தைத் திரட்டுவதும், தில்லைக்கு எடுத்துசெல்லுதலும் தொன்றுதொட்டு வரும் மரபு. தில்லைத் திருக்கோயிலைச் சுற்றிய வீதிகளில் யாழ்ப்பாணத்தார் தங்குவதற்காக கட்டிய மடங்கள் நெடுங்காலமாக உண்டு. ஞானப்பிரகாசர் குளத்தை ஒட்டிய திருவீதியில் மட்டும் இருபதுக்கு மேற்பட்ட மடங்கள் உள்ளன.

ஒவ்வொரு மடத்திற்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. கொக்குவிலார் கொக்குவில் மடத்தில் தங்குவார். காரைநகரார் காரைநகர் மடத்தில் தங்குவர். பல்வேறு குழுக்கள் சார்ந்த மடங்களாக அவை அங்குண்டு. கடந்த முப்பது ஆண்டுகளாக இம்மடங்கள் கவனிப்பார் அற்றுக்கிடக்கின்றன. யாழ்ப்பாணக் குடாநாடு அல்லோலகல்லோலப் பட்டுள்ளது. சிதம்பரப் பயணங்கள் தடைப்பட்டுவிட்டன. இந்தச்சூழல் சிதம்பரத்தின் சமூக விரோதிகளுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. பல மடங்கள் சமூகவிரோதி களின் ஆக்கிரமிப்பில் உள்ளன. சில மடங்கள் தொடர்பாக வழக்குகளும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்கு சிதம்பரத்தில் நிலங்கள் உள்ளன. சபையின் புண்ணியநாச்சி அறக்கட்டளைக்கு சிதம்பரம் மாலைகட்டித்தெருவில் மடம் உள்ளது. நாற்சாரவீடாக அமைந்த மடம் கடந்த சில ஆண்டுகளாக பயன்படாமலேயே இருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து சிதம்பரம் செல்பவர்கள் தங்குவதற்கான வசதிகள் அரிதாகின. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை செயலாளராக இருந்தவர் கரம்பனைச் சேர்ந்த திரு.சண்முகலிங்கம். கரம்பொன் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த அவர் யாழ்ப்பாணத்தின் தொழில் அதிபர்களுள் ஒருவர். கடந்த இருபது ஆண்டுகளாக யாழ்ப்பாணம் உருக்குலைந்த நிலையில் திரு.சண்முகலிங்கம சிதம்பரத்திலுள்ள புண்ணியநாச்சிமடத்தின் பழைய கட்டிடத்தை இடிக்க வேண்டும், புதிய அறைகள் கட்டவேண்டும் எனத் திட்டம் தீட்டினார். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை இவரது திட்டத்தை ஆதரித்தது. ஈழத்தொழிலதிபர்களும் இவருக்கு ஆதரவு தந்தனர். நான்கு ஆண்டுகளாக இடைவிடாத முயற்சி செய்து திரு.சண்முகலிங்கம் பல அறைகளும், தங்கு கூடமும் , கழிப்பறைகளும், குழியலறைகளும் கொண்ட நவீன மடம் ஒன்றை அமைத்தார்.

2002 யூன் 16 ஞாயிற்றுக்கிழமை புண்ணிய நாச்சி அறக்கட்டளையின் சிதம்பரம் மடத்தின் திறப்புவிழா கோலாகலமாக நடந்தது. சிதம்பரம் நகராட்சி மன்றத்தலைவர் தலைமை தாங்கினார்.

யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் அறக்கட்டளையின் சிதம்பரத் தலைவரும், அறங்காவலரும் கலந்து கொண்டனர். சிதம்பரம் நகரத்தின் முக்கிய பிரமுகர்களும் வந்திருந்தனர். நடராஜப்பெருமான் அருள்பெருக்க ஈழத்து அடியவர்களுக்காகப் புண்ணியநாச்சி மடம் சிதம்பரத்தில் மீளுருவாகி பயன்பாட்டிருக்கு வந்துள்ளது. ஈழத் தமிழர் தமிழ்நாட்டில் தமக்குரிய பாரம்பரியங்களை மீளமைப்பதில் திரு.சண்முகலிங்கம் முதல் அடியை எடுத்து வைத்துள்ளார்கள்.

சென்னையில் திருவெண்ணாமலையில், சிதம்பரத்தில். திருமறைக்காட்டில், கொடைக்கானலில், மதுரையில், திருசெந்தூரில், இராமேஸ்வரத்தில் ஈழத்தமிழருக்கு ஏராளமான அறக்கட்டளை சார் சொத்துக்கள் உள்ளன.

கடந்த 30 ஆண்டுகளாக இலங்கை இந்திய பயணங்களில் ஏற்பட்ட தடைகள், இடையூறுகள் ஈழத்தமிழர் இந்தச் சொத்துக்களை ஆட்சி செய்ய முடியாமல் தடுத்தன. இதனால் தமிழ்நாட்டிலுள்ள சிலர் இச்சொத்துக்களின் மீது உரிமை கொண்டாடத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் தென்மராட்சி, வரணி ஆதீனத்தின் ஆட்சியின் கீழ் கடந்த முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக திருமறைக்காடு திருக்கோயில் உள்ளது. ஈழத்தவர் ஆட்சியை மாற்றி தமிழகத்தவரிடம் திருமறைக்காடு திருக்கோயிலின் ஆட்சியைக் கொடுக்க வேண்டும் என்றே வழங்குகள் பலமுறை வந்து தோல்வி கண்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலம் இராமநாதன்கூட ஒருமுறை சென்னையில் வாதாடி வெற்றி கண்டுள்ளார். இப்பொழுதும் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. துணிச்சல்காரனான திரு.சண்முக லிங்கம் சந்தடி இல்லாமல், சலசலப்பும் இல்லாமல் சிதம்பரத்தில் யாழ்ப்பாணத்தான் உரிமையை நிலை நாட்டியுள்ளார்.

தமிழகம் எங்கும் உள்ள ஈழத்தமிழரின் அறக்கட்டளைச் சொத்துக்களை மீட்டெடுக்க முயலும் முதலடியாக இவரின் முயற்சியைக் கொள்ளலாம்.

தொன்று தொட்டுப் பாக்கு நீரிணை கடந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஈழத்தமிழர் களின் தலைமுறைகளின் எழுகின்ற எச்சங்கள் என்றென்றும் தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து வரவும் கோயில்களை வழிபடவும் தங்குதடை இன்றி வழிபிறக்குமாக.

- மறவன்புலவு க.சச்சிதானந்தன்.

## அறங்கள் - 32

1. ஆதுலர்க்குச்சாலை
2. ஓதுவார்க்குணர்வு
3. அறுசமயத்தோர்க்கு உண்டி
4. பசுவிற்கு வாயுறை
5. சிறைச்சோறு
6. பிச்சையிடுதல்
7. தின்பண்டம் நல்கல்
8. அறவைச் சோறு
9. மகப்பெறுவித்தல்
10. மகவு வளர்த்தல்
11. மகப்பால் வார்த்தல்
12. அறவைப் பிணஞ்சுடுதல்
13. அறவைத் தூரியம்
14. சுண்ணம்
15. நோய் மருந்து
16. வண்ணார்
17. நாவிதர்
18. கண்ணாடி
19. காதோலை
20. கண்மருந்து
21. தலைக்கெண்ணெய்
22. பெண்போகம்
23. பிறர்துயர் காத்தல்
24. தண்ணீர்ப்பந்தல்
25. மடம்
26. தடாகம்
27. பூஞ்சோலை
28. ஆவுரஞ்சுதறி நாட்டல்
29. விலங்குகளுக்கு உணவு கொடுத்தல்.
30. ஏறுவித்தல்
31. விலைகொடுத்துயிர் விடுத்தல்
32. கன்னிகாதானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# புண்ணியநாச்சி மடம்

# பரிபாலனம்

## யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை

பிரமாதி வருடம் கார்த்திகை மாதம்

29ம் நாள் (15.12.1999)

புதன்கிழமையன்று

## புண்ணியநாச்சி மடத்தின்

## புதிய கட்டிடத்திற்கான

## அடிக்கல்

சபைப் பிரதிநிதி

யாழ்ப்பாணம் திரு.வி.இராமநாதன்

சபையின் மூத்த உறுப்பினர்

யாழ்ப்பாணம் திரு.த.சண்முகலிங்கம்

ஆகியோரால் நாட்டப்பட்டது.

(அடிக்கல் நாட்டப்பட்டதன் வரலாற்றுத் தட்டு - கருங்கல்லாலானது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# புண்ணியநாச்சி மடம் திறப்புவிழா

**சித்திரபானு வருடம் ஆனித்திங்கள் 2ம் நாள்**

**16.06.2002 ஞாயிற்றுக்கிழமை**

சிதம்பரம் ஆறுமுகநாவலர் அறக்கட்டளை அறங்காவலர்
திரு.க.சுவாமிநாதன் அவர்களின் மகள்
வைத்திய கலாநிதி **பத்மினி கபாலிமூர்த்தி** அவர்கள்
மங்கள விளக்கேற்ற,

சென்னைப் பேராசிரியர் முனைவர்
**வை.இரத்தினசபாபதி** அவர்கள்
இடபக்கொடியேற்றித் தலைமை தாங்க

சிதம்பரம் நகர்மன்றத் தலைவர்
திரு.**எம்.எஸ்.என்.குமார்** அவர்கள்
முன்னிலை வகிக்க

சிதம்பரம் வழக்கறிஞர் திரு.அ.சம்பந்தம் அவர்கள்
சிதம்பரம் திரு.**இர.திருநாவுக்கரசு** அவர்கள்
யாழ்ப்பாணம் சைவசித்தாந்த கலாநிதி **க.கணேசலிங்கம்** அவர்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன
சபைப்பிரதிநிதி திரு.**வி.இராமநாதன்** அவர்கள்
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் மூத்த உறுப்பினர்
திரு.**த.சண்முகலிங்கம்** அவர்கள்
ஆகியோர் முன்னிலையில்

சிதம்பரம் ஆறுமுகநாவலர் அறக்கட்டளைக் குழுத்தலைவர்
திரு.**எம்.சுப்பிராயப்பிள்ளை** அவர்களால்

புண்ணியநாச்சி மடத்தின் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பெற்றது.

**(திறப்பு விழாவின் வரலாற்றுத்தகட்டு - கருங்கல்லாலானது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிகழும் சுபானு வருடம் மாசித்திங்கள் 7 ஆம் நாள் 19.02.2004 வியாழக்கிழமை அன்று யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபையால் நிர்வகிக்கப்படும் சிதம்பரம் புண்ணியநாச்சி மடத்தின் புதிய கட்டிடம் சிறப்பாக அமையப் பொறுப்பாக இருந்து பெருந்தொண்டாற்றிய**

**ஸ்ரீமான் வி. இராமநாதன்** அவர்கட்கு

**யாழ்ப்பாணம் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற புண்ணியநாச்சியம்மை தின விழாவின் போது பாராட்டி வழங்கிய**

# வாழ்த்துப்பாமாலை

திருவாரிப் பொழிபுங்கை நகரில் மேவும்
திருமகனாம் விநாசித் தம்பி வாழ்வில்
பெருவாரி யருள்வாரிப் பொழியும் அன்னை
பேரருளால் வந்தமகன் (இ)ராம நாதன்
தருமாரி யெனவாரித் தருமச் சேவை
தரணிதனுக் காற்றிவரு தன்மை யாளன்
அருள்மாரி பொழிசிவனின் ஆசி யாலே
அறப்பணிகள் பலபுரிந்தே அவனி வாழி.

மடத்துவெளி பாலசுப்ர மண்யன் கோவில்
மாண்புபெற வடிவமைத்து மகிமை தந்தாய்
வடத்தினொடு சித்திரத்தேர் வார்த்தும் நின்றாய்
வாஞ்சையொடு பாலர்விளை யாட வந்தன்
இடத்தினையும் கமலாம்பிகைக் கீந்து வந்தாய்
இல்லமது அர்ச்சகர்க்காய் எழுப்பித் தந்தே
திடத்தனையும் குறையாநற் பூசை காணத்
திருப்பணிகள் பலபுரிந்த செல்வா வாழி.

பெருபத்தி யோடுலகப் பேறாய்ப் போற்றும்
பெருங்கோவி லாதிரைநாட் பூசை கண்டே
இருபத்தி நாலாண்டாய் இறைஞ்சி வந்தாய்
இமயத்து ரிஷிகேசம் பத்ரிகே தாரம்
தருமுத்தி தலங்களெலாம் தரிசித் துவந்தாய்
தவநெறியும் சிவனருளும் தகையப் பெற்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் தில்லைநடராசா தீட்சதர் திறப்பு
விழாவின் போது வாழ்த்துரை வழங்குகின்றார்.



சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வீ.இரத்தினசபாபதி அவர்களுக்கு
திரு.வீ.இராமநாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் தீட்சதர் அவர்களுக்கு இலங்கையைச் சேர்ந்த திரு.நவரத்தினராசா அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.



விழா ஆரம்பமாவதற்கு முன்னர் சிதம்பரம் அட்வகேட் சம்பந்தன் வருகையை சிதரம்பரம் மாநகர முதல்வர் குமார், விழா நாயகர் வீ.இராமநாதன், மகப்பேற்று வைத்திய நிபுணர் பத்மினி கபாலமூர்த்தி உட்பட இலங்கை – இந்திய பிரமுகர்கள் – எதிர்பார்த்து நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபத்தி ஆசாரம் குன்றா வாழும்
கோமகனே வாழியநீ பன்நா றாண்டே.

சிந்தழகு மாலைகட்டித் தெருவின் பாங்கே
சிதம்பரத்து இறைவரது திருப்பா தத்தை
வந்துதொழு மடியவர்கள் வசதி யோங்க
வளமாரும் புண்யநாச்சி மடத்தை அமைத்துத்
தந்தஉன செழுமைமிகு பணியைப் போற்றி
தண்ணெழிலார் பொன்னாடை மாலை சூட்டி
முந்துசைவ பரிபாலன சபையா ரோடு
முகிழன்பாற் தொண்டர்களும் வாழ்த்தினாரே.

சிதம்பரத்தி வுறையீசன் சீரார் வாழ்த்தும்
செழிசைவ பரிபாலன சபையார் வாழ்த்தும்
நிதம்வரத்து செயுமடியார் நிகரில் வாழ்த்தும்
நின்பணிகண் டுளமகிழ்வார் நேரில் வாழ்த்தும்
பதம்துதித்து அகமகிழ்ந்தோர் பகர்ந்த வாழ்த்தும்
பரவமுதம் உண்டுமகிழ் பாரோர் வாழ்த்தும்
சதம்கதித்தும் வாழ்வுதனைச் சகத்திற் காக்க
சைவப்பணி பலபுரிந்தே தரணி வாழி.

அருமறையும் வாழியாச் சார்யர் வாழி
அரசுநனி வாழியா னினமும் வாழி
குருமுறையும் வாழிபொழி மழையும் வாழி
குலவுபுண்ய நாச்சியவர் புகழும் வாழி
ஒருகுறையு மிலாதுயிர்கள் உலகில் வாழி
ஒண்தமிழும் வாழியா கமமும் வாழி
திருமுறையும் வாழிசிவ நெறியும் வாழி
திருப்பணிசெய் (இ)ராமநாதன் செழித்தே வாழி.

சுபம்.

**வளமாக வாழ உளமார வாழ்த்துவோர்**
**யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர்.**
**யாழ்ப்பாணம்.**

ஆக்கம்.:
இராசையா குகதாசன். நாயன்மார்கட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதம்பரம் புண்ணியநாச்சி மட அறைகளின் முகப்பின் கருங்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள பெயர்கள்

| | |
|---|---|
| உ<br>கொழும்பு வர்த்தகர்<br>என்.கே.மயில்வாகனம்<br>நினைவாக<br>மனைவி ம.கனகம்மா<br>அன்பளிப்பு | உ<br>யாழ்ப்பாணம் சுருவிலூர்<br>க.சுப்பையா<br>நினைவாக<br>மகன் சு.ஜெயவத்சலன்<br>அன்பளிப்பு |
| உ<br>யாழ்ப்பாணம்<br>சின்னத்தம்பி – தையல்அம்மை<br>நினைவாக<br>மகன் சி.தியாகராஜா (S.T.R)<br>அன்பளிப்பு | உ<br>யாழ்ப்பாணம் உரும்பிராய்<br>சரவணமுத்து – பொன்னம்மா<br>நினைவாக<br>மகள் ச.பரமேஸ்வரி (கனடா)<br>அன்பளிப்பு |
| உ<br>யாழ்ப்பாணம் புங்குடுதீவு<br>சி.பொன்னையா<br>நினைவாக<br>மகன் பொ.கைலாசபதிவாசன் (U.K)<br>அன்பளிப்பு | உ<br>யாழ்ப்பாணம் புங்குடுதீவு<br>இ.சபாபதிப்பிள்ளை<br>நினைவாக<br>மகன் ச.பாலசிங்கம் (U.K)<br>அன்பளிப்பு |
| உ<br>யாழ்ப்பாணம் புங்குடுதீவு<br>ச.தர்மலிங்கம்<br>நினைவாக<br>மகன் த.நிரந்தரரஞ்சன் (U.K)<br>அன்பளிப்பு | உ<br>யாழ்ப்பாணம் கரம்பனூர்<br>மு.வேலுப்பிள்ளை<br>நினைவாக<br>மகன் வே.திருநீலகண்டன்<br>அன்பளிப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| உ<br>யாழ்ப்பாணம் புங்குடுதீவு<br>த.நாகம்மா<br>நினைவாக<br>மகன் த.குழந்தைவேலு<br>அன்பளிப்பு | உ<br>யாழ்ப்பாணம் புங்குடுதீவு<br>சு.மீனாட்சி<br>நினைவாக<br>கணவர் வி.சுப்பிரமணியம்<br>அன்பளிப்பு |
| உ<br>யாழ்ப்பாணம் புங்குடுதீவு<br>தம்பையா - பொன்னம்மா<br>நினைவாக, மகன்மார்<br>த.பரராசசிங்கம், த.சிவசோதி<br>அன்பளிப்பு | உ<br>திருச்சி<br>திரு.திருமதி இராசமாணிக்கம்<br>(சாய்ரேடர்ஸ், சுவிஸ்லாந்து)<br>அன்பளிப்பு |

## சிதம்பரம் புண்ணியநாச்சி மடத்தின் மேல் மண்டப முகப்பில் கருங்கல்லில் பொறிக்கப்பட்ட பெயர்கள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் புங்குடுதீவு - 10<br>மா.புனிதவதி<br>நினைவாக<br>கணவர் க.மார்க்கண்டு | யாழ்ப்பாணம் புங்குடுதீவு - 12<br>சின்னத்துரை . பார்வதிப்பிள்ளை<br>நினைவாக<br>மகன் சி.முருகானந்தம் |
| யாழ்ப்பாணம் புங்குடுதீவு<br>கு.வி.அமிர்தலிங்கத்துரை<br>நினைவாக<br>மனைவி அ.தர்மவதி | கொழும்பு<br>திரு.திருமதி சே.சுந்தரலிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரு.திருமதி தா.பத்மநாதனும் பிள்ளைகளும் (கனடா) | திரு.திருமதி எஸ்.சிவசேகரம், பி.குருபரநாதன், கு.பிருந்தா (கனடா) |
| யாழ்ப்பாணம் புங்குடுதீவு விநாசித்தம்பி – நாகம்மா நினைவாக மகன் வி.இராமநாதன் | யாழ்ப்பாணம் சுருவிலூர் தம்பியப்பா – கண்ணம்மா நினைவாக மகன் த.சண்முகலிங்கம் |
| கொழும்பு ஆடிட்டர் சு.சுந்தரம்பிள்ளை நினைவாக மகன் சு.சுதாகர் (ராஜன்) | யாழ்ப்பாணம் வேலணை செல்லையா – நல்லதங்கம் நினைவாக மகன் எஸ்.பி.சாமி, கொழும்பு. |

யாழ்ப்பாணம் புங்குடுதீவு – 10
சுப்ரமணியம் – பர்வதம்மா
நினைவாக
மகன் சு.இராஜலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பதிப்பகம், 430,காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல.: 021 - 222 3081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org